# ஏழாலை, குரும்பசிட்டி தாக்குதல்களை கண்டித்து 4000 பேர் பங்குபற்றிய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபாய் ஒன்று

ஈழமுரசு

முரசு 2 21-1-86 செவ்வாய் (தை 8 ஐ. அவ். 10) முழக்கம் 346

## ஈழவர் முன்னணி ஒழுங்கு செய்தது

(ஏழாலை)

கடந்த வாரம் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் குரும்பசிட்டி பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து இப்பகுதியில் நேற்றுக் காலை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெற்றது. 'ஈழவர் முன்னணி' ஏற்பாடு செய்திருந்த இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆண்கள், பெண்கள் உட்பட சுமார் நாலாயிரம் பேர் கலந்துகொண்டதாக அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார். குரும்பசிட்டியிலிருந்து ஆரம்பமான இவ் ஊர்வலம், உடுவில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தைச் சென்றடைந்து உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளித்ததுடன் முடிவடைந்தது. யாழ். அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. கோபாலரட்ணமும் நேரில் சென்று மகஜரைப் பெற்றுக் கொண்டார். ஆயுதப் படைகளை வெளியேற்று, பாதுகாப்புப் படைகளை வாபஸ் பெறு போன்ற பல்வேறு சுலோகங்கள் ஊர்வலத்தில் முன்வைக்கப்பட்டன. —6 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் இருநூறு இளைஞர்கள் கைது

(முல்லைத்தீவு நிருபர் என் சிவபாதம்)

முப்பதுக்கும் அதிகமான கவச வாகனங்களிலும், இ. போ. ச. பஸ் வண்டிகளிலும் முல்லைத்தீவிலுள்ள மாமூலை, கணுக்கேணி ஆகிய பகுதிகளுக்கு நேற்று அதிகாலை சென்ற இராணுவத்தினர், வீடுவீடாக் கச்சேரி தேணியிடு சுமார் இருநூறு இளைஞர்களை கைதுசெய்தனர்.

'தலையாட்டி மனிதன்' முன்னால் நிறுத்தப்பட்ட பின்னர் இவர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டனர் மிகுதிப் பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் முல்லைத்தீவுப் பகுதியில் நேற்றுக்கடும் பதற்றம் நிலவியது வித்தியானந்தாக் கல்லூரி மாணவரின்றி வெறிச்சோடிக்கிடந்தது.

## இன்று ஹர்த்தால்

### யாழ். முஸ்லிம் வர்த்தகர்கள் ஊர்வலமும்

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயச் சட்டத்தை நீக்கக்கோரி யாழ்ப்பாண முஸ்லிம் வர்த்தகர்கள் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதுடன், நீண்ட ஊர்வலமொன்றையும் நடத்தவுள்ளனர். காலை 9 மணிக்கு ஒஸ்மனியா சந்தியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் கச்சேரியில் முடிவடையும். கடந்த சில நாட்களுள் ராணுவத் தாக்குதலால் யாழ் நகரில் ஒன்பது முஸ்லிம்கள் மரணமானதைச் சுட்டிக்காட்டி நேற்று சின்னப் பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தில் ஹர்த்தால், ஊர்வல முடிவு எடுக்கப்பட்டது. இன்றைய ஹர்த்தாலில் இனமத பேதமின்றி சகல வர்த்தகர்களையும் பங்குகொள்ளுமாறு யாழ். முஸ்லிம் பொதுமக்கள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# புதிய பிரகடனத்தை எதிர்த்து மக்கள் கையெழுத்து இயக்கம்

## பிரஜைகள்குழு இணைப்புக்குழு ஏற்பாடு

(அலுவலக நிருபர் இ. பாரதி)

புதிதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தால் ஏற்பட்டுள்ள ஆபத்தின் தன்மையை எடுத்துக் கூறி, பொதுமக்கள் வாழ்க்கை இதனால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை விளக்கி அதனை உடன் வாபஸ் பெறுமாறு அரசைக் கோருமாறும், இப்பிரகடனத்திற்கான எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் சகல பொது மக்கள் ஸ்தாபனங்களையும் தமிழ்ப் பிரதேச பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு கோரியுள்ளது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்க தலங்கள் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களும், வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து அமைப்புகள் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களும், பிற ஸ்தாபனங்களும் இதற்குத் தமது எதிர்ப்பை எடுத்துக்காட்ட வேண்டுமெனவும் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தின் பின்னர் மேற்படி இணைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை சகல மட்டங்களிலும் எடுத்துக் கூறும் வகையில் இப்பிரகடனத்தை எதிர்க்கும் கையெழுத்து இயக்கமொன்றையும் தொடங்க வேண்டுமெனவும் இணைப்புக் குழு

...6 ஆம் பக்கம் பார்க்க

## பிரிகேடியருடன் சந்திப்பு

யாழ். கோட்டை இராணுவ முகாமில் பிரிகேடியர் எச் ரூ சிங்காவை இன்று காலை சந்திக்கும் தமிழ்ப் பிரதேச பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு புதிய பாதுகாப்பு வலயத்தால் தோன்றியுள்ள ஆபத்தான நிலையை எடுத்துக் கூறி அதனை வாபஸ் பெறுமாறு கோரவுள்ளது.

இச் சந்திப்பிற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். அரசாங்க அதிபர் செய்துள்ளார். இக் கூட்டத்திற்கு அரசாங்க அதிபரின் பிரதிநிதி ஒருவரும் —6-ம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் 3 இடத்தில் ராணுவ ரோந்துச் சோதனை

(வவுனியா)

வவுனியா நகரில் மூன்று முக்கிய இடங்களில் இராணுவ ரோந்து நடவடிக்கை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை தொடக்கம் வவுனியா மன்னார் வீதி, வவுனியா யாழ்ப்பாணம் வீதி, புகையிரத நிலைய வீதி ஆகியவற்றினூடாக வருகின்ற வாகனங்கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டுக் கடும்சோதனை செய்யப்பட்டன.

கவச வாகனங்கள், ஜீப் வண்டிகள் முதலியன ஆங் ...6 ம் பக்கம் பார்க்க

வெளிநாட்டவர் படம் பிடித்தபோது

## துப்பாக்கி வேட்டு; கிரனைட் வெடிப்பு; நகரில் பதற்றம்

யாழ். கோட்டை முகாம் பகுதிகளையும், இடிந்த மாநகர சபைக் கட்டடத்தையும் படம் பிடித்த வெளிநாட்டுத் தம்பதியரை நோக்கி கோட்டையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெற்ற குண்டுவெடிப்பு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் யாழ். நகரில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் நிலவியது.

—6ஆம் பக்கம் பார்க்க

### ராணுவவீரர் காயம்

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தில் ராணுவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தமிழர் கூட்டணி அறிக்கை:

## அரசுடன் பேச்சுவார்த்தையா? எங்களின் யோசனைக்கு முதலில் பதில் தரட்டும்!

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் தினமும் கொலைப்படுவதை கைவிட்டு தாம் தெரிவித்த யோசனைகளுக்கு ஆக்கபூர்வமான பதில் கிடைத்தாலன்றி இலங்கை அரசுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ பேச்சு நடாத்தும் சாத்தியம் எதுவும் இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—6 ஆம் பக்கம் பார்க்க

### 21 சடலங்கள் ஆஸ்பத்திரியில்

மட்டுநகர் இருதயபுரம் தாக்குதலில் மரணமான 21 ...6ம் பக்கம் பார்க்க

## புதிய சட்டத்தை நீக்குமாறு சட்டத்தரணிகள் தீர்மானம்

(அரியாலை)

"இராணுவ முகாம்களை சுற்றிப் பிரகடனப் படுத்திய ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம் வாபஸ் பெறவேண்டும்" என்ற பிரேரணை நேற்று நடைபெற்ற யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தின் அவசர விஷேட பொதுக் கூட்டத்தில் ஏகமன 6ம் பக்கம் பார்க்க

தமிழ்பேசும் மக்களின் அபிமானம் பெற்றது ஈழமுரசு

## மிருசுவில் விநாயகர் ச. ச. நிலையம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில படித்த மகளிர் திட்ட விநாயகர் சனசமூக நிலையம் சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

திரு. ஜி. இராஜயோகம் தலைமையில் நடைபெற்ற இது தொடர்பான விழாவில் திட்டப் பொறுப்பதிகாரி திருமதி வி. சந்திரதேவா, பண்டிதர், சமாதான நீதவான் திரு. பி. எம் ஞான பிரகாசம் முதலானோர் உரையாற்றினர்

## ஆலய உற்சவம்

கொழும்புத்துறை உதயபுரம் புனித. செபஸ்தியார் ஆலய திருநாள் இம்மாசம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 26ம் திகதி ஞாயிறு காலை பூசையுடன் முடிவடையும் 20ம் திகதி நடைபெறவிருந்த இதன் திருநாள் காலநிலை சீரில்லாததினல் இவ்வாறு பின்போடப்பட்டது.

நிலையச் செயலாளர் தபாலதிபர் திரு. எஸ். தாமோதரம் பிள்ளை நன்றியுரை நிகழ்த்தினர்.

## சமாதானசபை கோரிக்கை

உசன், மிருசுவில் பகுதிகளில் சட்டவிரோத மின் இணைப்பினைப் பெற்றிருப்போர் அவற்றைத் துண்டித்து முறைப்படி மின் இணைப்பினைப் பெற்றவர்களுக்கு உதவ வேண்டுமென உசன்சமாதான சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக "மேற்படி சமாதானசபை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது உசன், மிருசுவில் கிராமங்களுக்கு மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கு இங்கு தற்பொழுது ஒரே யொருமின் மாற்றியே உள்ளது. சட்ட விரோதமின் இணைப்புக்களால் ஏற்படும் அதிகபளு காரணமாக இவ் மின்மாற்றியினூடான மின் விநியோகம் அடிக்கடி துண்டிக்கப்படுகின்றது. இதனைத் தடுக்க இப்பகுதியிலுள்ள சட்ட விரோத மின் இணைப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

## சிறப்புரை

(அரியாலை)

இளைப்பாறிய அதிபரும், பண்டிதருமான ப. கணபதிப்பிள்ளை அவர்கள் அரியாலை கலைமகள் அம்பாள் ஆலயத்தில் "இளைஞரும் சமயமும்" என்னும் பொருள்பற்றி அரியாலை அறிவொளிக் கலை இலக்கியக் கழகம் ஒழுங்கு செய்திருக்கும் இன்றைய கூட்டத்தில் உரையாற்றுவார்.

## இளைஞர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாடு என்ற இடத்துக்கு அதிகாலை சென்ற இராணுவம் சில இளைஞர்களை விசாரணைக்கு அழைத்து சென்றதாக அறியப்படுகிறது. முல்லைத்தீவு பகுதியில் தற்போது தேடுதல் சோதனை போன்றவை மிகவும் அதிகமாக இடம்பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஓய்வுபெற்றார்

(வேலணை)

வேலணை தபால் அலுவலகத்தில் பிரதமதபாலதிபராகக் கடமைபுரிந்த திரு. எஸ். ஏ. பெனடிக்ற் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். கரம்பனைப்பிறப்பிடமாகக்கொண்ட இவர் பண்டாரவளை, கொழும்பு, இக்கடுவ, உட்பட பல பகுதிகளிலும் திறம்பட சேவையாற்றியுள்ளார்.

## பிறந்தநாள் வாழ்த்து

❋ உருத்திரபுரம் சிவநகர், மனோகபசீலன் மதிவதனி தம்பதியின் மகள் கோபிகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ குமரபுரம், அமரசிங்கம் விநாயகமலர் தம்பதியின் மகள் உமா இன்று தனது ஆருவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ வல்வெட்டித்துறை சீனன் தோட்டம், தருமகுலசிங்கம் இரஞ்சினிதேவி தம்பதியின் மகன் ஜனகன் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ ஏழாலை கிழக்கு, தியாகராஜா யோகமலர் தம்பதியின் மகள் பிரவீனு இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

## மாங்குளத்தில் கணக்கெடுப்பு

(மாங்குளம்)

மாங்குளம் நகரில் உள்ள தொழிலகங்கள், கடைகள், சந்தை ஆகியவற்றில் கடமையாற்றும், வதியும் நபர்களின் பெயர் விபரங்களை மாங்குளம் பொலிசார் அண்மையில் கணக்கெடுத்துள்ளார்கள் இதனால் மாங்குளத்திலும் திடீர் தேடுதல் நடவடிக்கையில் பொலிசாரோ, இராணுவத்தினரோ இறங்கலாம் எனப் பேசிக் கொள்ளப்படுகிறது.


## A/L 87 வகுப்பு

PURE APPLIED:- நல்லையா
பொருளியல் :- வரதராஜன்
ஸ்ரீஸ் கந்தராஜா
கணக்கியல் ;- ஜெயரட்ணம்
வர்த்தகம் :- K. ரட்ணம்
அளவையியல் :- கேசவன்
புவியியல் :- சண்

ஆரம்பம்: 25. 01. 86 9.00 மணி

**JAFFNA TECHNICAL INSTITUTE**

திருநெல்வேலிச் சந்தி (மேல் மாடி)
யாழ்ப்பாணம். R / 16348

## தொழிற் பயிற்சி

R/16348

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்பை பெறுவதற்கும் இலகுவாக மேல்படிப்பை தொடர்வதற்கும்

Technician Certificate in Quantity Surveying
Duration 3 Months.

வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

❋ ரெலிவிஷன் வீடியோ டெக், றேடியோ றிப்பயறிங்,
❋ வயறிங், ❋ வெல்டிங். ❋ றிவைண்டிங்.

Hotel management, German French.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் 25-1-86 காலை 9 மணி.

விபரங்கட்கு:

**Jaffna Technical Institute**
52/1, Stanley Road,
Jaffna.

141, சண்டி, றேட், (யூனியன் பேக்கறிக்கருகாமை) சாவகச்சேரி.

விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, (பெற்றோல் செற்முன்லேன்) நெல்லியடி, கரவெட்டி.


## ஓராண்டு நினைவஞ்சலி

21 . 1 . 1986



**திருமதி மேரி ஐறிஸ் பொன்ராஜா**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடனும் பாசத்துடனும் நினைவு கூரும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"பத்மகால்"
மன்னார். R 16339

## ஓராண்டு நினைவஞ்சலி



கூத்திஸைசப புரவலன

**அமரர் கந்தன் - சின்னத்துரை**

(காத்தான்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28.03.26 | 31.12.84 |

எமையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கடித்து, மீளாத் துயில் கொண்டு இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வமே. உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் இதய அஞ்சலிகள்.

உமது பிரிவால் துயருறும்
அமரரின் குடும்பத்தினர்,
உறவினர்.

அச்சுவேலி வடக்கு,
R/16353

## வரி விளம்பரம்

### அறிவித்தல் திட்டப்பரிசு

இம்மாதத்துக்குரிய அதிஷ்டசாலியை இம்மாதம் 25ம் திகதி மாலை 5 மணியளவில் அங்கத்தவர்கள் வந்து தெரியுங்கள். கொடுப்பனவுகள் யாவும் இத்திகதிக்குள் செலுத்தி உறுதிப்படுத்தல் அவசியம். அல்லது பரிசில் தெரிவானலும் கட்டியதொகை மட்டுமே திருப்பிக்கொடுக்கப் பெறும் திட்டப்பரிசு விதிகள் அங்கத்தவர்கள் எல்லோருக்கும் தபாலில் அனுப்பியுள்ளோம். கிடைக்காதவர்கள் நேரில் பெற்றுக்கொள்ளவும். இத்திட்டம் எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருமானமானதுவானலும் / திருமணமானலும் / பிரசவமானலும் / விபத்தானலும் / மரணமானலும் - நன்கொடைகளும் / கடன வசதிகளும் நிறைந்தது. சேராதவர்கள் சேர்ந்துகொள்ளலாம். தொகுதிகள் தோறும் பிரதிநிதிகள் தேவை. விபரங்களுக்கு முத்திரைக்கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கிபெனிபிட் கோ. லிமிட்டட், பொதுச் சந்தை, கோப்பாய்.

R/16352

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி நடராசா நல்லம்மா**

எங்களை விட்டுப்பிரிந்த எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும் உங்கள் பிரிவை
தாங்காமல் தவிக்கின்றோம்.

ரூபமஹால்,
9ம் வட்டாரம்,
புங்குடுதீவு. R/16334

அன்பு மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட உதை பந்தாட்டப் போட்டியில் இணைச்சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 15 வயதிற்குட்பட்டோர் குழுவினரைப் படத்தில் காணலாம். மேற்படி போட்டி யாழ். கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்டது.

(சுழிபுரம் நிருபர்)

## அரசாங்க அதிபர் லோகேஸ்வரன் பேச்சு:

# வவுனியாவில் அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த வேண்டியது அவசியம்!

(வவுனியா)

''வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகளோ அல்லது மக்களுக்குத் தேவையான வேறு வேலைத் திட்டங்களோ செயல்படுத்த முடியாத நிலையே நிலவுகின்றது என்று கொழும்பில் கருதப்படுகின்ற நிலைமை மாற்றப்படவேண்டும். இதற்காக திட்டமிடப்பட்ட வேலைதிட்டங்கள் நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் நிறைவேற்றப்படுவது அவசியமாகும்.''

இவ்வாறு வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் ஓமந்தை கிராமத்திற்கு மின்சாரம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

சம்பிரதாயபூர்வமாக, மின் குமிழை அழுத்தி ஓமந்தைக் கிராமத்திற்கு மின்னொளியை திரு. லோகேஸ்வரன் வழங்கினார். இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கத்தையும், மற்றும் அதிகாரிகளையும் மலர் மாலை சூட்டி ஓமந்தை கிராமோதய சபைத் தலைவர் திரு. சி. குமாரசாமியு,ம் முக்கியஸ்தர்களும் வரவேற்றனர்கள்.

ஓமந்தை பிள்ளையார் கோவிலில் விசேட பூஜையும் ஆராதனையும் நடைபெற்று மின்னொளி வழங்கப்பட்டபின் மகா வித்தியாலயக் கிராமோதய சபைத்தலைவர் திரு. சி. குமாரசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அங்கு அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில், ''வறிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக, வறுமை, அறியாமை, ஏற்றத்தாழ்வு, ஊழல்கள் போன்றவைகளுக்கு எதிராக அதிகாரிகள் போராடி வருகின்றனர்கள். வாழ்க்கையின் முக்கிய தேவைகளுள் ஒன்றான பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இப்போராட்டம் நடைபெறுகின்றது. அபிவிருத்தித் திட்டங்கள் வேலைத்திட்டங்களின் நடைமுறைச் செயல்பாடு போன்றவற்றில் அதிகாரிகளுடன் இணைந்து மக்களும் பங்கு காள்ள வேண்டும். இதன் மூலம் எமது மாவட்டத்தைப் பற்றி வெளியிடங்களில் நிலவும் தப்பபிப்பிராயம் மாற்றப்படவேண்டும்.

இம்மாவட்டத்தின் அபிவிருத்திக்கென மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் ஓர் அம்சமாக ஓமந்தைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது இதனைத் தகுந்த வழியில் பயன்படுத்தி கைத்தொழில் விவசாயம் போன்ற பலதரப்பட்ட தொழில் வளர்ச்சிக்காக ஆக்க முயற்சிகளில் பயன்படுத்தி மக்கள் முன்னேற வேண்டும்.

மின்சார சபைக்கு நட்டமோ இழப்போ ஏற்படாத வகையில் வரை முறைகளுக்கு உட்பட்டு கட்டுப் பாட்டுடன் மின்சாரத்தை பயன்படுத்த வேண்டும். காலக் கிரமத்தில் இங்குள்ள சகல அரசாங்க கட்டடங்களுக்கும், ஓமந்தை மகாவித்தியாலத்திற்கும் மின்னொளி வழங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்'' என்றும் தெரிவித்தார்.

கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம், திட்டப்பணிப்பாளர் திரு. ரீ. லங்காநேசன், உதவி அரசாங்க அதிபர் திரு. கே. ஐயம்பிள்ளை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பி. கமலநாதன், வவுனியா கிராமோதய சபை தலைவரும், ஓமந்தை மகாவித்தியாலய அதிபருமான திரு. லோகசிங்கம் உட்பட பலரும் இங்கு உரையாற்றினர்கள்.

# இருவாரங்கள் கடந்தும் கூட இலவச பாடநூல் இல்லை

(வயாவிளான்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இன்னமும், இலவசப் பாடப்புத்தகம் வழங்கப்படவில்லை. பாடசாலை தொடங்கி இரண்டு வாரங்கள் ஆகியும் இலவச பாடப்புத்தகம் வழங்கப்படாமையால் பெற்றோரும், மாணவரும், ஆசிரியர்களும் அதிருப்தியடைந்துள்ளனர்.

கடந்த வருடம் இரண்டாம் தவணை முடிவிலேயே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சிக் கல்வி மாவட்டப் பிள்ளைகளுக்கு பாடநூல் வழங்கப்பட்டது. இதே நிலைதான் இவ்வருடமும் ஏற்படுமோவென இவர்கள் அச்சமடைகின்றனர்.

எது எவ்வாறுகினும். பழைய புத்தகங்களையாவது சேகரித்து பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கி கல்வியைத் தடையின்றி தொடர தமது முழு முயற்சியினையும் பல அதிபர்கள் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மல்லாகத்தில் விரைவில் மாதர் பயிற்சி நிலையம்

(சுழிபுரம்)

தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் பெண்களுக்கான நடமாடும் பயிற்சி நிலையம் ஒன்று அடுத்தமாதம் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள் தற்சமயம் கோரப்பட்டுள்ளன. இப்பயிற்சியானது மூன்று மாத காலம் தொடர்ந்து நடாத்தப்படும். இதற்கான முழுச் செலவையும் தேசிய இளைஞர் சேவை மன்றமே பொறுப்பேற்கும்.

ஐம்பது யுவதிகள் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர். இவர்களுக்குப் பூவேலை, சிகை அலங்காரம், தையல், பன்னவேலை, பூமாலை மனையியல் போன்ற இன்னோரன்ன தொழில்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊழியர் சகலர்க்கும்

# இறை நம்பிக்கை, சேவை மனப்பான்மைமிகஅவசியம்

(புலோலி)

''கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்னும் கீதோபதேசத்திற்கேற்ப இறை நம்பிக்கையுடனும் சேவை மனப்பான்மையுடனும் சேவையாற்றுபவரை எதுவித துன்பங்களும் அணுகமாட்டா. அவரது வாழ்க்கை வளம்பெற்று உயர்வடையும். அரச ஊழியர்கள் பொது மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி அவர்களின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.''

இவ்வாறு, யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலகத்தில் இலிகிதராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. ஆ. புண்ணியமூர்த்திக்கு உப அலுவலக ஊழியர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய திரு. புண்ணியமூர்த்தி குறிப்பிட்டார்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய திரு. புண்ணியமூர்த்தி குறிப்பிட்டதாவது: ''நான் இப் புலோலி உப அலுவலகத்தில் இப்பகுதி பொது மக்களின் நன்மை கருதி என்னாலான சிறந்த சேவைகளை வழங்கியுள்ளேன். மேலும் எவ்வெப் பகுதிகளில் கடமையாற்ற வேண்டி ஏற்படுகின்றதோ அவ்வப் பகுதிகளில் எல்லாம் என்னாலான சிறந்த சேவைகளை வழங்குவேன்.''

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்திரு. கனகசபாபதி தலைமையுரையில் குறிப்பிட்டதாவது: அரசாங்க உத்தியோகத்தர்களின் சேவைகள் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவேண்டும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சேவை மனப்பான்மை என்பனவற்றுடன் அரசாங்க உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும்.

ஆயுர்வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். வேலும்மயிலும், அலுவலக பிரதம லிகிதர் திரு. எஸ். இராமச்சந்திரன் பொதுசன நூலகப் பொறுப்பாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் ஆகியோரும் உரையாற்றினர்.

# 'சிரமதானம் மூலம் ஐக்கிய மனோபாவம் உருவாகின்றது'

(நல்லூர்)

''சிரமதான இயக்க வேலைகளில் நாம் பங்கெடுப்பதன் மூலம் நம்மிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்துக் கொள்ள முடியும். இவ்வேலைத்திட்டத்தில் பங்குபற்றும் நாம் நமது சக்தியை நல்ல செயல் திட்டத்திற்காகச் செலவிடவும் முடியும். இது போன்ற வேலைகளை நாம் மேற்கொள்வதால் நம்மிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளவும் வழியேற்படுகிறது இப்படி ஒன்றிணைந்து செயல்படுவதின் பயனாக எமது கிராமத்தின் பொருளாதாரத்தையும் வளர்க்க முடியும்.''

இவ்வாறு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையிலிருந்து அம்பனை வரை செல்லும் வெள்ளவாய்க்காலின் ஒரு பகுதியை சிரமதான மூலம் செப்பனிட்ட தெல்லிப்பளைசெல்வா ஐக்கிய கலாச்சார நிலைய அங்கத்தவர்கள் மத்தியில் சிரமதான வேலையை ஆரம்பித்து வைத்த வைத்திய கலாநிதி எம். நாகலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தச் சிரமதானப்பணியில் ஈடுபட்ட கலாச்சார நிலைய அங்கத்தவர்களும், கிராம மக்களும், வெள்ள வாய்க்காலில் நிரம்பியிருந்த கற்கள், முட்கள் பீங்கான் ஓடுகள், பற்றைகள், சிறிய மரங்கள் என்பவற்றை அகற்றி வாய்க்காலைச் செப்பனிட்டனர். சிரமதானத்தில் ஈடுபட்டவர்களுக்குச் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# பிரசாரத்திற்கு கைமேல் பலன்

(ஏழாலை)

ஏழாலை உப அலுவலகத்தினாலும் மின்சாரத் திட்ட பாதுகாப்புக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட தீவிரப் பிரசார முயற்சியின் பயனாய் மயிலங்காடு-கொலனி வீதியில் காணப்பட்ட சட்ட விரோத மின்னிணைப்புகள், இணைப்பு ஏற்படுத்தப்பட்டவர்களாலேயே அகற்றப்பட்டுள்ளது.

இவர்களுக்கு மின் தொடர்பு வழங்க ஏழாலை உப அலுவலகம் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது. இம்முன்மாதிரியை ஏனைய சட்டவிரோத மின் பாவனையாளர்களும் மேற்கொள்ளுவார்களானால் சகல அபிவிருத்தித் திட்டங்களையும் இலகுவாக மேற்கொள்ளமுடியும் எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

# அன்னை சாரதா ஜனன தினம்

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 133 வது ஜன்ம தினம் அதி சிறப்பாக சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவையொட்டி மலரொன்றும் சுவாமியால் வெளியிடப்பட்டது. மலரின் முதற் பிரதியை யாழ். வர்த்தகர் திரு. ரீ. தியாகலிங்கம்பெற்றுக் கொண்டார். ஏழைகள், அகதிகளுக்கான உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

க. பொ. த. (உயர்தர) ப் பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்த ஹாட்லி கல்லூரி மாணவன் செல்வன் வை. சிதம்பரநாதனுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

'மல்ரி சேவிசஸ்' வழங்கும்

## பன்முகச் சேவைகள்

※ செயலகச் சேவை: தமிழ், ஆங்கிலத் தட்டச்சு, றேனியோ வேலைகளும் கடிதத் தொடர்புகள், தொடர்பான ஆலோசனைகள் உட்பட சகல விதமான செயலகச் சேவைகளும்

※ தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவை: தூசி, அழுக்கு, துர்நாற்றம் நீக்கி, தூய்மையுடனும் மெருகுடனும், தொல்லையற்றும் தொலைபேசிக் கருவிகள் இயங்கிட, திணைக்கள அனுமதியுடன் செயற்படும் சேவையாகும்.

※ திருமண சேவை: திருமணம் நிறைவேறும்வரை எவ்வித கட்டணமும் அறவிடாது, கண்ணியமான முறையில், தொடர்பு கொள்பவர்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் அமைய, கல்யாணப் பொருத்தங்களை ஏற்படுத்திக் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டு இயங்குவது.

※ அஞ்சல் வழி ஆங்கிலக் கல்விச் சேவை: இச்சேவை மூலம், மாணவ, மாணவியர், பல்துறைகளிலும் பணிபுரிவோர், அயல்நாடு செல்லவிருப்பவர்கள், அறிவை விருத்தி செய்ய விரும்புபவர்கள் ஆகிய அனைவரும் வீட்டிலிருந்தபடியே விரைவாகவும் இலகுவாகவும் தபால் மூலம் ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசக் கற்றுக்கொள்ளலாம்.

※ தரகுமுகவர் சேவை: காணி, வீடுவளவு, கடைகள், கட்டடங்கள், ஆகியனவற்றை விற்பதற்கோ, வாங்குவதற்கோ, வாடகைக்கு அல்லது குத்தகைக்குக் கொடுப்பதற்கோ விரும்புபவர்களுக்குத் தரகு முகவர்களாகச் செயற்படுவோம்.

※ பிரயாண சேவை: வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகள், பயண ஆலோசனைகள் ஆகியவற்றுடன் கடவுச் சீட்டுத் தொடர்பான சகல வேலைகட்டும் உதவுவதோடு ஜோர்டான், கட்டார் ஆகிய நாடுகள் உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்கு சாரதிகள், பொது உதவியாளர்கள் போன்ற தொழிலாளர் தர வேலைவாய்ப்புடனான பிரயாணங்களையும் நம்பிக்கையாளர்கள் மூலம் ஒழுங்கு செய்வோம்.

தரமான சேவைகள்-குறைவான கட்டணங்கள்:

விபரங்களுக்கு:-

மல்ரி சேவிசஸ்

37 (351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22762.

B/1018

உதய சிந்தனை

அடக்கம் என்பது தன்னைத்தானே சரியாக மதிப்பிட்டுக் கொள்ளலாகும்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

21-1-86 செவ்வாய்க்கிழமை (குரோதன) தை-8

# அனைத்துச் சக்திகளும் அணிதிரள வேண்டும்!

யாழ்ப்பாணத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலயச் சட்டத்துக்கு மக்கள் மத்தியில் கிளம்பியிருக்கும் ஆட்சேபனைகள் பற்றி நேற்று இங்கு குறிப்பிட்டிருந்தோம்,

மக்கள் தங்கள் முழுப்பலம் கொண்டு இதனை எதிர்க்க வேண்டுமெனவும் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம்,

பிரஜைகள் குழுக்கள், அன்னையர் முன்னணி, மக்கள் நடவடிக்கைக் குழு, வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு, இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் வடபிரதேசக் குழு உட்பட பல்வேறு அமைப்புக்களும் ஏற்கனவே தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூட இதனால் யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்படவுள்ள பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது.

இவற்றுக்குப் பதிலளிக்குமுகமாக தேசிய பந்தோபஸ்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் பொதுமக்கள் மீது கோட்டைக்குள்ளிருக்கும் இராணுவத்தினர் 'மோட்டோர்' தாக்குதல்களை நடத்த மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளது.

ஆனால், "இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் மோட்டோர் தாக்குதல் நடத்தினால், இராணுவமும் மோட்டோர் தாக்குதல் நடாத்துமென்றும், இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது" என்றும் எச்சரித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த அறிக்கையை நுணுக்கமாகப் பரிசீலிப்போமானால், ஆயிரம் மீட்டர் வலயத்துக்குள்ளிருக்கும் மக்கள் எந்த வேளையிலும் இராணுவத் தாக்குதலுக்குள்ளாகலாமென்பது நன்கு புலனாகின்றது.

யாராவது ஒருவர் இராணுவ முகாம்மீது, ஏதாவது ஒரு வகையில் தாக்குதல் நடத்தினால், அப்பாவிப் பொதுமக்கள் பழிவாங்கப்படுவார்கள் என்று இதற்கு அர்த்தம் கொள்வது எந்த வகையிலும் தவறாகாது.

முகாம் மீது தாக்குதல் நடத்துபவர்களை அரசாங்கம் "தீவிரவாதிகள்" என்று கூறலாம்.

ஆனால், அவர்கள் ஏதாவது ஒரு உளவுப்படையாக ஏன் இருக்கக் கூடாது?

யாழ்ப்பாணத்தில் நெருக்கடியை உண்டாக்க மொசாட் படை, அல்லது சி. ஐ. ஏ. யினர் இவ்வாறான ஐந்தாம் படை வேலைகளைச் செய்ய மாட்டார்களா?

விடுதலைப் போராளிகள் மீது முழு அபாண்டத்தையும் சுமத்தச் செய்வதற்கும், அதன்மூலம் யாழ்ப்பாண மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அழிவை ஏற்படுத்தவும், உளவுப் படையினர் தங்கள் கைங்கரியங்களை இங்கு செய்யலாம் என்பது அனைவரதும் அச்சமாகும்.

இவ்வாறான நிலையில், மக்களுடன் மக்களாக நடமாடும் அந்தக் கோஷ்டியை இனம் காண வேண்டியது மக்கள் கடமையேயானாலும், அதனைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர், அரைவாசி அழிவுகளும் முடிந்து விடலாம்.

எனவே, தேவையற்ற பாதுகாப்பு வலயச் சட்டத்தை வாபஸ் பெறுமாறும், கோட்டை இராணுவ முகாமை இடம்மாற்றுமாறு அரசை நெருக்குவதுமே முதலில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாகும்.

இவ்விரு கோரிக்கைகளையும் முன்வைத்து தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த மக்கள் நடவடிக்கைக் குழு எடுத்துள்ள முடிவை அனைவரும் பாராட்டவே செய்வர்.

முதலாவது எதிர்ப்பு நடவடிக்கையாக அன்னையர் முன்னணியினர் நாளை யாழ். கச்சேரி வாசலில் மறியல் நடத்தவுள்ளனர்.

இன்று இராணுவ அதிகாரிகளைச் சந்திக்கவிருக்கும் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவினர், புதிய சட்டத்தினால் மக்கள் எதிர்கொள்ளும் அபாயங்களை இடித்துரைக்க வேண்டும்.

சாத்வீக வழியில் மக்கள் காட்டும் எதிர்ப்பினால் தான், புதிய சட்டத்தை வாப்ஸ்பெற வைக்க முடியும் என்பது எமது கருத்தாகும்

எனவே, அனைத்துச் சக்திகளும் அணிதிரள வேண்டும்!

❀ 'புரன்ட் லைன்' ஜனவரி 11 — 14-ம் திகதிய இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்

# கொழும்பு நடத்தும் போரில் ஜெயவர்த்தன அரசுக்கு பாகிஸ்தான் பூரண ஆதரவு!

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனறல் ஸியா-உல்-ஹக், பங்களா தேஷ் தலைநகர் டாக்காவில் நடந்தேறிய 'சார்க்' உச்சி மாநாட்டிற் பங்குபற்றியபின் தாயகம் மீள்கையில் இலங்கையில் ஐந்து நாள் இடைத்தங்கினார். இலங்கையில் அவரை விருந்தோம்பியதைப் பொறுத்தமட்டில், ஐந்து தின விஜயம் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டானதாக அமைந்தது: 'பயங்கர வாதத்திற்கு' எதிரான கொழும்பின் போரில் பாகிஸ்தானிய தலைவரின் ஆதரவுச் செய்தியைப் பலத்தது ஆக்கிற்று. அதே சமயம், தற்போது தொல்லைகளுக்கு ஆளாகியுள்ள ஜெயவர்த்தன அரசாங்கத்திற்குத் துணை நிற்குமாறு இலங்கையின் சிறுபான்மையினராகிய முஸ்லிம்களுக்கான ஒரு செய்தியாகவும் அது அமைந்தது.

வைத்தியசாலை ஒன்றினைத் திறந்து வைத்தல் முதற்கொண்டு, கொழும்பு மாநகரப் பிதாக்கள் அளித்த பொதுசன வரவேற்பு ஈறாக, பகிரங்க வைபவங்கள் நிரம்பிய ஒரே களியாட்டமாக இருந்தது ஸியாவின் விஜயம். இரு நாடுகளுக்குமிடையே காத்திரமான தோழமை உண்டு எனக் காண்பித்தற்கு நிருவாகம் அவாக் கொண்டுள்ளமை விஜயம் நெடுகிலும் இழையோடி நின்றது.

தமிழர் விடுதலைப் போராளிகளின் ஈழப் போராட்டம் பாரதம் வகிக்கும் பாத்திரத்தின் நிச்சயமின்மை, ஆகியவற்றின் பின்னணியில், பாகிஸ்தானிய அரசின் தலைவர் வாய்மொழியும் வார்த்தைகள் தெம்பூட்டுவனவாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பில் முஸ்லிம் காரணியும் இடம் பெற்றது. சென்ற பொதுத் தேர்தலின் போது இலங்கையின் பத்து இலட்சம் முஸ்லிம்களும் ஆளும் கட்சிக்குப் பெருந்திரளாக வாக்களித்தனர். ஆனால் அண்மைக் காலங்களில் விரக்தியின் அறிகுறிகள் தென்படலாகியுள்ளன. ஜெனரல் ஸியாவின் விஜயம் இவ் விரக்தியைத் தணிக்க உதவக்கூடும் என உணரப்பட்டது, கடந்த காலத்தில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே நிலவிய நட்புறவுத் தளைகளையும், அவற்றைப் பலப்படுத்த வேண்டிய தேவையையும் எடுத்துரைக்கும் உணர்வுகள் இவ் விஜயத்தின் போது எடுத்தாளப்பட்டன.

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது விருந்தாளியைக் கௌரவிக்குமுகமாக அளித்த ஒரு விருந்துபசாரத்தின்போது, பாகிஸ்தானால் 'தங்குதடையின்றி' வழங்கப் பெற்ற புரிந்துணர்வுக்கும் செயல்வகை ஆதரவுக்கும் நன்றி பாராட்டி உரையாற்றினார். ஸியாவின் பதில், அவரது விருந்தோம்புநருக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்தது: 'இலங்கை அரசாங்கம் தனது ஒற்றுமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாத்தற்கு ஒரு நீதியான, வைராக்கியமான கொள்கையை அனுசரித்துவருகிறது. இலங்கையின் எல்லா நண்பரும் அயலவரும் உச்ச அளவு ஆதரவு நல்குவது தகும்' என எடுத்துக் கூறினார் அவர்.

விஜயம் முன்னேறுதலும், ஸியா இவ்வாதரவு விடயத்தினை மேலும் வளர்த்து உரையாற்றலானார். கண்டி நகரில் அவருக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பு உபசாரத்தின் போது, 1971 ஆம் ஆண்டு நடந்து முடிந்த பங்களாதேஷ் யுத்தம்பற்றிக் குறிப்பிட்ட அவர், பாகிஸ்தானிய விமானங்கள் கொழும்பு விமானத் தளத்தில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டமையை நன்றி ததும்ப நினைவு கூரும் வகையில், 'எமது "கஷ்டதசை"யில் நீங்கள் எமக்கு ஈந்த ஆதரவினை நாம் என்றும் நினைவில் இருத்திக்கொள்வோம் என்பதை நீங்களறியத் தருகிறேம். எது விடயத்திலாயினும் பாகிஸ்தானிய மக்கள் ஏதும் உதவியாக இருக்க இயலுமானால் நாம் அதற்குத் தயங்கி நிற்க மாட்டோம்' எனச் சொற்பொழிவு ஆற்றினார்.

பத்திரிகையாளர்கள் எவ்வளவுதான் ஸியாவை நெருக்கி வினவியபோதும், தாம் ஏற்பாடு செய்தளிக்க விரும்பிய உதவியின் தன்மையை அவர் எவ்வாறாயினும் விரித்துக் கூறினாரல்லர். பத்திரிகையாளர் மாநாடொன்றின் போது, ஆயுத விற்பனை நிகழவுள்ளதா என ஒருவர் வினவியதற்கு, 'பாகிஸ்தான் படைக்கல ஏற்றுமதி செய்யும் ஒரு நாடல்ல' என ஜெனறல் ஸியா விடையிறுத்தார்.

"பாகிஸ்தான் மட்டும் ஆயுத உற்பத்தி செய்யும் அல்லது வர்த்தகம் நடத்தும் ஒரு தேசமாக இருந்திருக்குமானால், பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கையின் போருக்கு ஆதரவாக என்வசமுள்ள எல்லாவற்றையும் நான் வழங்கியிருப்பேன். பயங்கரவாதத்தினால் இலங்கை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்த்துப்போராட பாகிஸ்தானிய வளங்கள் அத்தனையும் கிடைக்கக்கூடியனவாக உள்ளன. நாடுகள், உள்ளிருந்து நிர்மூலமாக்கப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. இன்று இலங்கையில் நடைபெற்று வருவது நாளை பாகிஸ்தானுக்கு நேரலாம்' இவ்வாறு உற்சாகமூட்டும் உறுதியுரை வழங்கினார் அவர்.

இப்பேர்ப்பட்ட தோழமை பிரசித்தப்பட்டு இருந்ததாயினும் அதிகரித்த இராணுவக் கூட்டுழைப்பின் வெட்டவெளிச்சமான அறிகுறிகள் எவையேனும் தென்படுவனவாக இல்லை. ஐந்து நாட்கள் நீடித்த இப் பாகிஸ்தான் தலைவரின் இலங்கை விஜயத்தில், நாற்பது நிமிடங்கள் மட்டுமே உத்தியோகபூர்வ உரையாடல்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தமை இவ்விஜயத்தின் அசாதாரண அம்சமாகப்பட்டது, ஆனாலும் இரண்டு தேசத் தலைவர்களும் ஒருமித்து நேரம் கழித்தற்கு அனேக வாய்ப்புகள் உடையோராக இருந்தனர். எனவே இலங்கையிலுள்ள தமிழர் விடுதலைப் போராளி இயக்கத்தை அடக்குதற்கு "செயல்முறை உதவிபற்றிய உருப்படியான ஓர் உடன்படிக்கை" உருவாதலையிட்டுத் தீவிரமான சாத்தியக்கூற்று ஆரூடங்கள் அடிபட்டன. அதிகாரிகள் தீர்க்கமான மௌனம் சாதித்தமையினால் இவை தொடர்பான ஊர்சிதங்களோ நிராகரிப்புகளோ வெளிவரவில்லை.

அரசிற்கும் அரசிற்குமிடையிலான உறவுகள் எந்த அளவுக்கு வலுவடைந்தனவோ, அந்த அளவுக்கு ஸியாவின் விஜயம் இத்தீவின் முஸ்லிம்கள் மீது தாக்கம்ஏற்படுத்தியுமிருந்தது. இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஏ சி. எஸ். ஹமீத் தமது பாராளுமன்றத் தொகுதியில்வைத்து ஜெனரல் ஸியாவுக்கு ஓர் டாம்பீக வரவேற்பு வழங்கினார். ஹமீதின் சொந்தப் பட்டினமாகிய அக்குறணையில் வைத்தியசாலையொன்றுக்கு ஜெனரல் ஸியா-உல்- ஹக்கின் பெயர் இடப்பட்டது. அதனைக் கொண்டு நடத்தத் துணைபுரியுமுகமாக, ஆறு பாகிஸ்தானிய டாக்டர்களையும் இருபது இலட்சம் ரூபாவையும் தந்துதவுவதாக ஸியா உறுதிமொழி கூறினார்.

முஸ்லிம்கள் இலங்கைத் தீவின் சிறுபான்மைச் சமுதாயத்தினர் எனும் வகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஸியா ஏதாவது சொல்வார் என அவர்களிற் சில பகுதியினர் எதிர்பார்த்தனர். ஆகவே ஓரளவு எதிர்பார்ப்பு ஆவல் நிலவியதை உணரக் கூடியதாக இருந்தது. இப்படி இருந்தாலும், அவருக்கு வழங்கப்பெற்ற இவ்வரவேற்பு உபசாரத்தில் உள்ளபடியான ஒரு தன்னியல்பு உணர்வின்மை அங்கு காணப்பட்டது. முன்னர் அயூப்கான், பூட்டோ, பங்களாதேஷின் ஸியா- உர் ரஹ்மானுடைய விஜயத்தையும் தற்போதைய ஜெனரல் ஸியாவின் விஜயத்தையும் ஒப்பிட்டு நோக்கிய அவதானிகள் தத்ரூபமாக ஒரு வேறுபாட்டைக் கண்டுகொண்டனர். ஜெனரல் ஸியாவின் விஜயத்தின்பால் பொதுசனங்கள் காட்டிய ஆர்வம் உற்சாகம் ஆகியன மிக மிகக் குறைவாகவே இருந்தது.

இதற்கு எடுத்துக் காட்டப்பெற்ற காரணங்கள் பலதரப்பட்டன. முஸ்லிம் சமூகத்தவரிடையே அடிப்படைத் தத்துவங்கள் குறித்து ஒரு போராளி உந்துவிசை மேலெழுந்து வருகிறது. இத்தூய புத்தெழுச்சியை இக்கட்டான நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய காரியங்களை ஜெனரல் ஸியா தம்மையறிந்தோ அறியாமலோ செய்ய நேரிடலாம் என அச்சங்கள் நிலவின. இத்தீவின் கண் புத்த சமயத்தின் புனித தலங்களுள் ஒன்றென மதிக்

(- 5ம் பக்கம் பார்க்க)

★ வெளியுறவுச் செயலர் சந்திப்பு பூர்த்தி

# பாரத-பாக். கூட்டுக் கமிஷன் மார்ச்சில் கூடி நிலை ஆராயும்!

(இஸ்லாமாபாத்)

**பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி தனது உத்தியோகபூர்வ பாகிஸ்தான் விஜயத்தின்போது ஜனாதிபதி ஷியாவுல் ஹக்குடன் இரு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாக நேற்று தெரிவிக்கப்பட்டது. அவர் பாகிஸ்தான் பிரதமர், வெளியுறவு, நிதி மந்திரிகளையும் சந்தித்து உரையாடியதாகவும் மேலும் தகவல் வெளியாகியுள்ளது.**

பாகிஸ்தான் தனது போர் விலக்கல் யோசனை தொடர்பான சில திட்டங்களையும் இப் பேச்சுவார்த்தையின் போது திரு. பண்டாரியிடம் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்நாயகம் சமர்ப்பித்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

பரஸ்பரம் அணு உலைத் தாக்குதல் தவிர்ப்பு உடன்படிக்கை தொடர்பான யோசனைகளில் பெரும்பகுதி இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யோசனைகளைப் புதுடில்லி பரிசீலிக்கும் என்று திரு. பண்டாரி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இருநாடுகளினதும் வெளியுறவுச் செயலர்களின் பேச்சுவார்த்தைகள் பூர்த்தி பெற்றுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் கூட்டுக்கமிஷன் கூடி குறிப்பிட்ட உடன் படிக்கை வாசகம் குறித்து மீண்டும் பேசக் கூடும் எனக் கூறப்படுகிறது.

## ஆட்சி கவிழ்ப்பு

(மெசூரா)

தென்னாபிரிக்க எல்லைப்புறத்திலுள்ள ஆபிரிக்க நாடான லெஸேடோவில் திடீர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

தலைநகர் மெசூராவில் வெடிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்பதாக நகர மக்களை மேற்கோள் காட்டித் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம மந்திரி லெகுவா ஜொனதன் இங்கு பிரதம மந்திரியாக இருந்தார். மேஜர் ஜெனரல் லெகெட்டேனியா அரசு பொறுப்பை ஏற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாரத மத்திய மந்திரிகள் மூவர்

## கட்சியின் ஜனநாயக மரபு நெறிகாக்கவே ராஜினாமா

(புதுடில்லி)

"கட்சியின் ஜனநாயக மரபுகளைச் செயற்படுத்தும் பொருட்டே மத்திய அமைச்சர்கள் சிலரின் ராஜினாமா இடம்பெற்றது" என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"மத்திய அமைச்சரவையில் மேலும் மாற்றங்கள் நிகழும்" என்றும் அவர் தெரிவித்தார்.

திருவாளர்கள் அர்ஜுன்சிங், அஞ்சையா, கிஷோர்சர்மா ஆகியோரே கட்சிப் பணிகளுக்காக ராஜினாமாச் செய்தோராவர்.

## கொழும்பு ...

- 4ம் பக்கத் தொடர்

கப்படும் கண்டியிலுள்ள தலதா மாளிகைக்கு ஸியா மேற்கொண்ட விஜயத்தில் இத்தகைய அபாயங்கள் நிரம்ப இருந்தன. அத்தலத்தில் ஸியா மலர் அர்ச்சித்து இருந்தாராயின், இஸ்லாமிய தூய போக்காளருடன் அவருக்குச் சங்கடங்கள் நேர்ந்திருக்கும். ஆனால் புத்தி சாதுரியமான ஜெனரல் ஸியா என்ன செய்தார்? புத்த பகவானின் புனித தந்தப் பேழையின் பாத கமலங்களில் இடும் வண்ணம் வேண்டி ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கரங்களில் மல்லிகைப் பூக்கள் நிரம்பிய தட்டொன்றை ஒப்படைத்துவிட்டு இக்கட்டான இந் நிலையினின்றும் தப்பித்துக் கொண்டார்!

இந்த ஐந்து தின இலங்கை விஜயத்தின்போது ஒரேயொரு தடவைதான் ஜெனரல் ஸியா அனைத்து முஸ்லிம் நேயர்களைக் கொண்ட சபையினரைச் சந்திக்க வேண்டியவர் ஆயினர். "சோனக இஸ்லாமிய கலாச்சார" மண்டபத்தில் ஸியாவுக்கு இரவு உணவு விருந்துபசாரம் அளிக்கப்பட்ட வைபவமே அது. அங்கு, அவ்விருந்திற்கான பிரவேசச் சீட்டுகள் வாங்குவாறின்றி இருந்தன. ஒரு முஸ்லிம் நாட்டுத் தலைவர் எவருக்கும் அதுகாறும் நேர்ந்ததாகக் கேள்விப்பட்டிராத இக்கதி, தற்போதைய விஜயத்தின் பால் முஸ்லிம் சமுதாயத்தினர் கொண்டிருந்த அற்ப ஆர்வத்தின் ஓர் அறிகுறியாகும்.

அவ்விருந்தில் ஜெனரல் ஸியா தமது சக மதத்தினர்க்குச் சில புத்திமதிகள் கூறினார். தொடர்ந்தும் இலங்கைக்கு விசுவாசமாக இருக்கும் வண்ணம் அவர்களை அவர் வேண்டிக்கொண்டமை எதிர்பார்க்கப்பட்டதே. எதிர்பார்க்கப்படாதது என்னவெனில் ஜெயவர்த்தன அரசாங்கத்திற்கு அவர்கள் ஆதரவு அளித்து வலுவூட்ட வேண்டும் என ஸியா வேண்டுகோள் விடுத்தமையே ஆகும். ஒரு நாட்டுக்கு விஜயம் செய்யும் பிற நாட்டுத் தலைவர் ஒருவர் இங்ஙனம் அதன் உள்நாட்டு அலுவல்களில் தலையிடுதற்கு ஈடான செயல்களில் ஈடுபடுவதே அசாதாரணமானது ஆகும்.

அதனையடுத்தே உண்மையான ஓர் ஆச்சரியம் அங்கு எழுந்தது. ஒரு முஸ்லிம், தமது அடிப்படை உரிமைகள் அத்துமீறப்பட்டதாக இலங்கையின் சுப்றீம் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த ஒரு வழக்குப் பற்றி ஜெனரல் ஸியா குறிப்பிட்டதோடு அமையாது, முஸ்லிம்கள் நட்புறவும் நல்லிணக்கமும் பேணி வாழ வேண்டிய அதேவேளை 'அவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடவும் வேண்டும்' எனவும் இங்குள்ள முஸ்லிம்களுக்கு அவர் ஆலோசனை வழங்கியதுதான் அவர் உரைத்த மற்றெல்லாவற்றையும் விட அனைவர்க்கும் ஆச்சரியம் விளைத்தது.

பாகிஸ்தானிய தலைவர் ஸியா இலங்கைப் பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்த போது, எதிர்க் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன ஆகியவற்றின் ஏக பிரதிநிதிகள் அக்கூட்டத்தைப் பகிஷ்கரித்தனர். இவ் விஜயத்தின் முற்றிலும் அசம்பாவித ஓர் அம்சமாக இது இடம்பெற்றது. சிறீ லங்கா சுதந்திரக்கட்சி ஒரு பகிஷ்கரிப்பு பற்றிச் சற்று எண்ணியதாயினும் அவ்வாறு செய்வதில்லை என இறுதியில் தீர்மானித்தது. முஸ்லிம்களது பகைமையை மாத்திரமல்லாது பாகிஸ்தானை ஒருநண்பனாகவும் தோழனாகவும் காண்போரின் விரோதத்தினையும் சிறீ. ல. சு. க. சம்பாதிக்க வேண்டி நேரலாம் என அது அஞ்சியமையே பகிஷ்கரிப்பு இறுதியிற் கைவிடப்பட்டமைக்குக் காரணம் ஆயிற்று.

பாகிஸ்தானிய தலைவரின் இவ்விஜயத்தின் போது நடந்தேறிய எல்லாவற்றையும் வைத்துக் கூட்டு மொத்தமாக நோக்குமிடத்து, அண்மைக் காலங்களில் இத்தகைய உற்சாகம் உத்தியோகபூர்வச் செயற்கையாக உற்பவிக்கப்பட்ட இன்னும் ஒரேயொரு விஜயத்தை நினைவுகூர்வதாயின், 1981 ஆம் ஆண்டு நிகழ்ந்த பிரித்தானிய முடியரசினது இலங்கை விஜயத்தைத்தான் குறிப்பிடலாம் என்பதையிட்டு ஐயம் சிறிதும் இல்லை.

**O/L DEC., 86**

Gr. 9, 8, 7, 8 வகுப்புகள் மாலைநேர வார இறுதி வகுப்புகள்

கணிதம்:- V. T. ராஜேந்திரா
விஞ்ஞானம்:- புவனேந்திரன்
தமிழ்:- பொன் செல்வராஜா
சமூகக் கல்வி:- ஸ்ரீஸ்கந்தராஜா
ஆங்கிலம்:- சோமாஸ்

ஆரம்பம் 25. 1. 86 3 மணி

**JAFFNA TECHNICAL INSTITUTE**

திருநெல்வேலிச் சந்தி (மேல்மாடி)
யாழ்ப்பாணம். R / 16348

★ உலக சமயதின வைபவத்தில் துணைவேந்தர் 'வித்தி' பேச்சு

## பாதுகாப்பற்ற சூழ்நிலையில் சமாதானம் பற்றி கற்பனை

(அரியாலை)

கடந்த நாற்பது ஆண்டுகளாக உலக சமயதினம் எழுது நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகிறது. எங்கள் நாட்டில் கடந்த ஐந்து வருடங்களாகவும், யாழ்ப்பாணத்தில் இப்பொழுது முதற் தடவையாகவும் கொண்டாடுகிறோம். முக்கியமாக மனித இனத்தின் ஒற்றுமையை வளர்க்கவே இத்தினத்தைக் கொண்டாடுகிறோம். எந்தச் சமயத்தில், இனத்தில், நாட்டில் ஒருவன் பிறந்தாலும் அவன் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவனேயாகும். சமயம் மனிதனைத் தாய்மைப்படுத்துகிறது மட்டுமன்றி, ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ வழி வகுக்கிறது. மனிதன் மனதில் தூய்மை இல்லாதபடியால்தான் போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் தெரிவித்தார். உலக சமய தின வருடாந்த அனுட்டானம் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது இதில் அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். திரு. கே. சிவப்பிரகாசம் வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

"பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலையிலேயே எந்த நிமிடத்தில், எங்கிருந்து எந்தக் குண்டு வீசப்பட்டு அழிவோமோ என்ற அச்சத்திற்கு மத்தியிலே சமாதானத்தைப் பற்றிக் கற்பனை செய்யக்கூடி உள்ளோம். அச்சமாதானத்திற்குச் சமயங்கள் எந்த அளவு பங்காற்ற முடியுமென்பதைச் சிந்திக்க முனைகின்றோம்"

"இன்றைய சூழ்நிலையில் உலக சமாதானம் என்பது எல்லா மட்டங்களிலும் ஒரு கேள்விக் குறியாகவே நிற்கின்றது. உலக வல்லரசு அணிகள் தொடக்கம் எமது உள்ளூர்க் கிராமப் புறம் வரை போட்டியும், பூசலும், ஆக்கிரமிப்பும், ஆயுதப் போராட்டமும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. சித்திரவதைகள், கொலைகள், கொள்ளைகள் என்பன தொடர்கதைகளாக உள்ளன.

இந்த அமைதியற்ற போக்கிற்கும், குழப்பங்கள், போராட்டங்கள், முரண்பாடுகள், என்பனவற்றிற்குமான காரணிகளைக் கண்டறிவதும், அவற்றை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதும் நாகரிக உணர்வும், பண்பாட்டுச் சிந்தனையுமுள்ள ஒவ்வொருவருடையதுமான கடமைகளாகும்" என்றார்.

அதி வண. யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தனது உரையில் குறிப்பிட்டதாவது:-

"இக்கால உலகத்தின் மனித சமுதாயத்தின் பல நிலைமைகளை அவதானிக்கும் போது பல ஆழமான துன்பம் தரும் பிரிவினைகள் இருப்பதை நாம் கண்டுணர முடியும். இப்பிரிவுகள் தனிமனிதர்களிடையேயும் நாடுகளைக் கொண்ட அணிகளுக்கிடையேயும் நிலவ வேண்டிய உறவில் உருவாகி, ஆதிக்கம் செலுத்தும் பேரவாவினால் வலுவடைகின்றன.

உரையாடலினால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிணக்குகள் மோதல்களாகவும், எதிர்ப்புகளாகவும் வளர்ந்து வருவதே இப்பிரிவினைகளுக்கு அடிப்படைக் காரணம் என்பதை உணருதல் கடினமான ஒன்றல்ல. இப் பிரிவினைகளை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது அவை கவலைக்குரியவையாகத் தோன்றினாலும், அவற்றைக் கவனத்துடன் ஆராயும் பொழுதே அவைகளுக்குரிய அடிப்படைக் காரணத்தைக் கண்டறியலாம். அது மனிதனுடைய இயல்பிலேயே காணப்படும் ஒரு பாதிப்பாகும். அதை எமது மதக் கொள்கைப்படி பாவம் என அழைக்கின்றோம். அது நம் ஆதிப் பெற்றோரிடமிருந்து பிறப்பு வழியாக, நமக்கு வரும் ஒரு பரம்பரைக் குறைபாடாகிய சென்மபாவத்தில் தொடங்கி, நமக்குள்ள சுதந்திரத்தை நாம் ஒவ்வொருவரும் பிழையாகப் பயன்படுத்தும்போது தோன்றும் பாவத்தையும் உள்ளடக்கியுள்ளது.

யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இரண்டாம் உலக யுத்த முடிவடைந்த போதும் நாம் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகிறோம். எப்போது யுத்தம் தோன்றுமோ என்ற பயம் உண்டாகிறது. சமயம், சாதனை, தத்துவம் என்ற மூன்றில் சமயம் அநுட்டானத்தையும், சாதனை ஒழுக்க நெறிகளையும், தத்துவம், சிந்தனை உலகில் தோன்றும் உண்மைகளையும் உள்ளடக்கியுள்ளது.

மன அமைதி கெடுவதற்குப் பயமும், தேவைகளுமே காரணமாகும். மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் உடலைக்கட்டுப்படுத்த வேண்டும். யோக சூத்திரத்தின் முதற் பகுதி இதனைக் கூறும். மனக் கட்டுப்பாட்டால் வரும் அமைதி குடும்பத்தில் தொடங்கி உலகம் முழுவதும் பரவுகிறது" என்றார்.

பஹாய் சமயத் துணைவாரி உறுப்பினர் திரு. க. செ. சுவர்ணராஜ் கூறையாற்றுகையில் குறிப்பிட்டவாறு:

"நேசம் என்றுமே நிலைத்து நிற்கும் சமாதனம் என்றால் ஒளி, வழிகாட்டல் என்று அர்த்தமாகும்.

நாம் எல்லோரும், ஒரே இறைவனின் படைப்பு என்று உணர்ந்தோமானால் யாரையும் குறைத்துப் பேசமாட்டோம், வித்தியாசப்படுத்த மாட்டோம்' என்றார்.

ஜனாப் மௌலவி எம். ஏ. சீ. எம் ஜலீல் அவர்கள் உரையாற்றுகையில்குறிப்பிட்டதாவது;

ஒற்றுமைக்காகவும், சத்தியத்திற்காகவும், சமாதானத்திற்காகவும், ஸல் அல்லாகு அலைகுவசல்லம் அவர்கள் இப் புவிக்கு வந்தார். சமாதானம், சாந்தியை அமுல் நடத்த இறைவன் தனது தூதராக, அருட்கொடையாக, இஸ்லாம் மதத்தின் ஒளிவிளக்காக நபிகளை அனுப்பி வைத்தார். சாந்தி சமாதானம், நீதி, நேர்மை நிலை பெறுவதற்காக மக்கமா நகரில் பிறந்த நபிகள், நாற்பதாவது வயதில் றசூல் என்ற பட்டம் பெற்று உலகத் தூதரானார்.

எமது தொழுகையின்போது சிவப்பன், கறுப்பன், தொழிலாளி, முதலாளி, ஏழை, பணக்காரன், படித்தவன் என்ற பகுபாடின்றி ஒரே இடத்தில் ஒரே இறைவனை வணங்குகின்றோம்" என்றார்.

இவ்வைபவத்தில் பெண்கள் கீதம் இசைத்தார்கள். செல்வி பிறேமலதா கதிர்காமநாதன் நன்றியுரை வழங்கினார்.

21 . 01 . 86 செவ்வாய்க்கிழமை

# ஈழமுரசு

## வங்கிகள் நேற்று இயங்கவில்லை; ரயில் டிக்கற் விற்பனையும் இல்லை!

கோட்டையிலுள்ள தபால் நிலையத்திலும், வங்கிக் கிளைகளிலும் வேலை செய்யும் ஊழியர்கள் நேற்று கடமைக்குச் செல்லாததால், ரயில் டிக்கற் பெற வந்தவர்களும், பென்ஷன் காரர்களும், பொது மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். கோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற அசம்பாவிதம் காரணமாகவே ஊழியர்கள் கடமைக்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளையில் யாழ் ரயில் நிலையத்தில் வைத்து நேற்று மணி ஒடருக்கு டிக்கற் வழங்கப்பட்டது.

யாழ். முஸ்லிம் லீக் கிளை மகஜர்:

# புது சட்டப்படி கோட்டை ராணுவம் தாக்கினால்
# யாழ். முஸ்லிம்களே அதிகம் பாதிக்கப்படுவர்!

"யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் எந்தவொரு இராணுவ முகாமும் தனிப்பட மக்கள் அடர்த்தி குறைந்த பகுதிகளில் அமைந்திருக்கவில்லை. மாறாக சனநெருக்கடியான பிரதேசங்களிலேயே அமைந்துள்ளன. இதனால் புதிய பாதுகாப்பு வலய சட்டத்தின் விளைவாக சாதாரண பொதுமக்களே பெருமளவில் கொன்று குவிக்கப்படவுள்ளனர். அதேவேளை யாழ்ப்பாண கோட்டையில் உள்ள இராணுவ முகாமை எடுத்துக் கொண்டால் அதன் தாக்கம் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களையே பாதிக்குமென அஞ்சுகின்றோம்." என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபமுன்னணிகளின் சம்மேளனத்திற்கு, யாழ் முஸ்லிம் லீக் கிளையால் அனுப்பப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளையின் தலைவர் சு. மு. சகுபர், செயலாளர் மு. மு. கபூர் ஆகியோரால் அனுப்பப்பட்ட அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ் நகரைப் பொறுத்த வரையில் நகரத்தின் மையப் பிரதேசத்திலேயே முஸ்லிம்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப் பாதுகாப்பு வலயத்தினால் பாரிய அளவான பாதிப்பு முஸ்லிம்களுக்கே ஏற்படும் என அஞ்சுகின்றோம். கடந்த 16ம் திகதி நடாத்தப்பட்ட இராணுவ தாக்குதலில் இரு முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த அரசாங்கம் அனுமதித்ததின் விளைவே இது. இராணுவத்தினால் ஏவப்பட்ட 'மோட்டோர் ஷெல்' வெடித்ததினால் வீட்டினுள் இருந்த நான்கு முஸ்லிம்கள் படுகாயமுற்றார்கள், வேறு பலர் கொல்லப்பட்டனர்.

எனவே 1000 மீட்டர் தொலைவு வரை பாதுகாப்பு வலயம் அமையுமென்பதையும் இப்பிரதேசத்தினுள் பீரங்கிகள், மற்றும் கனரக ஆயுதங்களை பயன்படுத்த இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினையும் மீள்பரிசோதனை செய்யுமாறு ஜனாதிபதியை சம்மேளனம் கோரவேண்டும். அத்தோடு யாழ் முஸ்லிம்களையும் அவர்களினது உடைமைகளையும் இப்புதிய சட்டத்தினால் பாதிக்கப்படாது பாதுகாக்க சம்மேளனம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆயிரம் மீட்டர் எல்லைக்குள் யாழ். முஸ்லிம் வட்டாரம் அடங்குவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கோட்டை ராணுவ முகாமை மூடிவிடுமாறு முஸ்லிம்கள் சமாதான சபை கோரிக்கை

யாழ். குடாநாட்டு முகாம்களைச் சுற்றிய ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம், மற்றும் ஆயுதப் படையினருக்கு பீரங்கி போன்ற ஆயுதங்களை பாவிக்க அனுமதி உட்பட அரசின் புதிய பிரகடனத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து நேற்று முன்தினம் யாழ். முஸ்லிம் சமாதான சபையினரின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சகல பள்ளிவாசல் பரிபாலகர்கள், உலாமா பெருமக்கள், யாழ். ஜமா அத்தே இஸ்லாமிய இயக்கம், யாழ். முஸ்லிம் பாதுகாப்பு அமைப்பு, யாழ் இஸ்லாமிய இளைஞர் அமைப்பு யாழ், முஸ்லிம் வர்த்தகர்கள், போக்குவரத்துச் சங்கம், யாழ், முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, யாழ், ஜும்மா மொஸ்க் முஸ்லிம் லீக், முஸ்லிம்களது அமைப்புகள் ஒன்றியம், முன்னாள் முஸ்லிம் மாவட்ட சபை உறுப்பினர், முன்னாள் முஸ்லிம் மாநகர சபை அங்கத்தவர், முஸ்லிம் சட்டத்தரணிகள், முஸ்லிம் சமாதான நீதிபதிகள், முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை இரத்துச் செய்தல், கோட்டையை விட்டு ராணுவ முகாமை அகற்ற வேண்டும் என ஜனாதிபதி, பந்தோபஸ்து அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் சகல முஸ்லிம் அமைச்சர்கள், பிரதிநிதிகளுக்கு மகஜர் ஒன்றை அனுப்புவதாகவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஏழாலை....

மகஜரைப் பெற்றுக் கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் உரையாற்றும்போது, தான் அரசாங்க அதிபரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் தனித்தனி சத்தியக் கடுதாசி மூலம் தமது இழப்புக்களை கிராம சேவகர் மூலம் சேகரித்துத் தரின் வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்படும் என அரசாங்க அதிபர் கூறியதாகக் கூறினார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தனதுரையில், இத் துர்ப்பாக்கிய சம்பவத்திற்கு மனம் வருந்துவதாகவும், உயிரிழந்தவர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும், உணர்ச்சியில் வேறுபாடில்லாது உள்ளக் குமுறல்களில் நேரடியாகப் பங்குபற்றுவதாகவும், இம்மகஜரை அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக மேலதிக அரசாங்க அதிபர் பெற்றுக் கொண்டதற்கு நன்றி கூறுவதாகவும் குறிப்பிட்டார். குப்பிளான், குரும்பசிட்டி, ஏழாலைப் பகுதிகளின் பிரஜைகள் குழுத் தலைவர்களும் உரையாற்றிய பின் திரு. நடராசாவின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

புதிய பிரகடனம்...

கருத்து வெளியிட்டுள்ளது. சகல வெகுஜன அமைப்புகளும் இதற்கு உதவ வேண்டுமெனவும், கையெழுத்து மகஜர்கள் சர்வதேச அமைப்பு ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்புதிய ஆபத்தை எடுத்துக் கூற முன்வந்துள்ள நிறுவனங்களின் சேவையை வரவேற்கும் வகையில் காலத்தின் தேவையாக அமைந்துள்ள இப்பணியைச் செய்யுமாறு மற்றைய நிறுவனங்களையும் இணைப்புக் குழு வேண்டியுள்ளது.

அரசுடன்...

இந்தப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகளை எடுக்குமாறு முன்னாள் எம். பி. திரு. நீலன் திருச்செல்வத்தையோ அல்லது வேறு எவரையுமோ கூட்டணி அங்கீகரித்துள்ளதாக வந்த செய்தியையும் கூட்டணியின் அரசியல் பிரிவு மறுத்துள்ளது.

21 சடலம்...

பேரின் சடலங்கள் நேற்று ஆயுதப்படையினரால் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. இதனைத் தவிர மேலும் 8 சடலங்கள் ஒரு வீட்டுக்குள் சிதைந்து கிடப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியருடன்...

கலந்து கொள்ளவுள்ளார்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நாவற்குழி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரஜைகள் குழுக்கள் இச் சந்திப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இன்றைய சந்திப்பையடுத்து மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகளை ஆராய்வதற்காக இணைப்புக் குழுவின் கூட்டமொன்று சனிக்கிழமை காலை பத்து மணிக்கு நல்லூர் இந்து விடுதி மண்டபத்தில் நடத்துவதெனவும் நேற்று நடைபெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புதிய பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி சம்பந்தமாக யாழ். மக்கள் நடவடிக்கைக் குழு பிரதிநிதிகளும் இன்று காலை 9 மணிக்கு வட பகுதி இராணுவ அதிகாரியை கோட்டையில் சந்திப்பர்.

புதிய பாதுகாப்பு வலய சட்டத்தை நீக்குதல், கோட்டை இராணுவ முகாமை அப்புறப்படுத்தல், மக்கள் மீதான பாதுகாப்பு படையினரின் தாக்குதல்களை நிறுத்துதல் ஆகிய விடயங்கள் பற்றி இவர்கள் இராணுவ அதிகாரிக்கு எடுத்துக் கூறுவர்.

கம்யூனிஸ்ட் (இடது) கண்டனம்:

## தமிழ் மக்களை பீரங்கிக்குத் தீனிகளாக்க நடவடிக்கை

"யாழ் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றிய ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயமும், பெரும் ஆயுதங்களைப் பாவிப்பதற்கான அனுமதியும் தமிழ் மக்களைப் பீரங்கித் தீனிகளாக்கும் புதிய நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும். அரசின் இம்முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக்கண்டிக்கின்றது. இதை உடன் வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்துகிறது."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அரசியல் குழு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகள் வடபகுதி மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளின் மையமாகும். அவை இயங்காவிடின் முழு வடபகுதியுமே ஸ்தம்பிதம் அடைந்துவிடும். அதேபோல் வடபகுதியில் உருவாக்கப்பட்டுள்ள ஏனைய ராணுவ முகாம்களைச் சுற்றியும் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டால் தமிழ்மக்கள் இன்றைய கஷ்டம் நிறைந்த நிலையில் எவ்வாறு தமது அன்றாட அலுவல்களைச் செய்யமுடியும் எனவே தமிழ் மக்களைப் பற்றி சிறிதளவேனும் அக்கறை காட்டாத முன்பின் யோசனையற்ற அரசின் இம்முடிவுகள் உடன் வாபஸ் வாங்கப்பட வேண்டும். தமிழ் மக்களை மேன்மேலும் விரக்திப்படுத்தி நசுக்கமுற்படும் செயல்களை நிறுத்த வேண்டும் என்பதை எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேம்படி, மத்திய கல்லூரி நேற்று திறக்கப்படவில்லை

யாழ் நகரில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களால் யாழ். மத்திய கல்லூரியும், வேம்படி மகளிர் கல்லூரியும் நேற்று நடைபெறவில்லை.

அச்சம் காரணமாகப் பெருமளவு மாணவ, மாணவியர்களும், ஆசிரியர்களும் கல்லூரிக்கு வராததனாலேயே பாடசாலை நடைபெறவில்லை. பாடசாலைக்கு வந்த ஒரு சில மாணவ, மாணவியர்களும் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார்கள்.

நகரிலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் கூட நேற்று மூடப்பட்டே இருந்தன.

மத்திய கல்லூரிக்கு அருகாமையிலும் நேற்று பீரங்கியின் 'ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது குறிப்பிடத்தக்கது.

புதிய...

தாக நிறைவேற்றப்பட்டது. சங்கத் தலைவர் திரு. எஸ் ஆர். கனகநாயகம் தலைமையில் யாழ். மாவட்ட நீதிமன்ற அரங்கில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தற்போதைய ஆபத்தான சூழ்நிலை பற்றி ஆராயப்பட்டது. இப் பிரேரணை ஜனாதிபதிக்கும் அனுப்ப வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ் வலயத்தால் யாழ்ப்பாண மக்களுக்கும், தனியார் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் அரசாங்க வங்கி ஊழியர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், அரசாங்க தனியார் ஆஸ்பத்திரிகளுக்கும், நோயாளிகளுக்கும், சட்டத்தரணிகளுக்கும், நீதி மன்ற உத்தியோகத்தர்களுக்கும், கட்சிகாரருக்கும், பெரும் கஷ்டமும், உயிருக்கும் உடலுக்கும் பெரும் ஆபத்து விளைவிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரச்சினையை ஆயுத ரீதியாக தீர்ப்பதைத் தவிர்த்து அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் அரசியல் ரீதியாக தமிழ்மக்களுடைய அடிப்படை, அரசியல், மொழி, பிரதேச உரிமைகளை அளித்து உடன் இறுதித் தீர்வைக் காணுவதும் ஜனாதிபதியின் பொறுப்பாகும் என்பதையும் யாழ். சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வவுனியாவில்....

காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன இத் தேடுதல் நடவடிக்கை சோதனை முயற்சியாக முடுக்கி விடப்பட்டுள்ள போதிலும் எவரும் கைது செய்யப்படவில்லை.

துப்பாக்கி....

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து கோட்டைக்கு வெளியேயிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் படையினர் வெளியே வருவதைத் தடுப்பதற்காக கிரனைட் வெடிக்கவைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதனால் யாழ்நகரை நோக்கி வந்த பஸ்கள், மினிபஸ்கள் அனைத்தும் ஆரியகுளம் சந்தியுடன் நிறுத்தப்பட்டன. சுமார் இரண்டு மணித்தியாலமாக பதற்றம் நீடித்தது.

அனேகமான கடைகளும் காலையுடனேயே பூட்டப்பட்டன. காலை பத்து மணிக்குப் பின்னர் பூட்டப்பட்டிருந்த சில கடைகள் திறக்கப்பட்டு விட்டபோதிலும் சன நடமாட்டம் நகரில் குறைவாகவே காணப்பட்டது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 21-01-86 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336